[1st November 1958

Seed Farm at Cheyyar village

* 780 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், செய்யூரில் சர்க்கார் விதைப்பண்ணைக் காக எத்தனை ஏக்கர் குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

(ஆ) நஞ்சை எவ்வளவு ? புஞ்சை எவ்வளவு ?

(இ) நஞ்சைக்கு குத்தகை எவ்வளவு ரூபாய் சர்க்கார் அளிக்கிறது ?

(ஈ) புஞ்சைக்கு குத்தகை எவ்வளவு அளிக்கிறது ?

(உ) அதே செய்யூர் கிராமத்தில் நஞ்சை புஞ்சைகளுக்கு எவ்வளவு குத்தகை அளிக்கப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 26·78 acres.

(*b*) 25·15 acres of wet lands and 1·63 acres of dry lands.

(*c*) & (*d*) The Collector of Chingleput has suggested a rate of Rs. 179 per acre of wet lands and Rs. 59 per acre of dry lands, but the rates have not yet been finalised.

(*e*) The lease amount depends upon several factors. No definite statement can be made in this regard.

SRI A. GOVINDASAMY : செய்யாறு பகுதியில் உள்ள நிலத்திற்கும் சுற்றுப்புறத்திலுள்ளதற்கும் 120 ரூபாய் கொடுக்கப்படுவது அரசாங்கத் துக்குத் தெரியுமா ? அப்படி தனிச் சலுகை காட்டப்படவேண்டிய அவசிய மென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் பதில் சொன்னதில் அது இன்னும் முடிவாகவில்லை. அவ்வாறு அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று தான் குறிப்பிட்டேன்.

SRI A. GOVINDASAMY : செய்யாறு பாரத்தில் கரம்பாக வைத் திருக்கிற நிலங்களுக்கும் குத்தகை கொடுக்கப்பட்டு வருவது அரசாங்கத் துக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவை ஏன் கரம்பையாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். நிலத்தை குத்தகைக்கு என்று எடுத்துக்கொண்டு விட்டால் கரம்பையாக வைத்திருந் தாலும் உபயோகப்படுத்திக் கொண்டாலும் குத்தகை கொடுக்கத்தான் வேண்டும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : விதைப் பண்ணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் நிலங்கள் பண்ணை வைப்பதற்கு நிலசுவாந்தார் களிடம் குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்பதனால் தியாகிகளுக்காக வழங்கப்பட்ட வீர மான்ய நிலங்களை விதைப்பண்ணைகளுக்காக எடுத்துக் கொண்டு தியாகிகளுக்காவது அந்தக் குத்தகைப் பணத்தைக் கொடுப்பார் களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நல்ல விதைகளை உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம். தியாகிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல. மேலும் விதைப்பண ணைக்கு குறைந்த பட்சம் 25 ஏக்கரா மொத்தமாக வேண்டும். தியாகி களுக்குக் கொடுக்கப்பட்ட 5 ஏக்கரா 3 ஏக்கரா என்பவை பண்ணை வைக்க போதுமானது அல்ல.

அடுத்த கேள்வி எடுத்துக்கொள்ளும்போது ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை எழுந்து நின்றார்.)

MR. SPEAKER : I know question 781 has been passed over because the Hon. Minister for Finance is not in town. All the questions relating to the Hon. Finance Minister will be taken up next day.